ஒ. எம். சுப்பிரமணியன்.

Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-9
பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0
வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } சனிரோறு 23-11-1946 கார்த்திகைமீ 8உ } மலர் 7

# சேலம் காலேஜில் பெரியார் சொற்பொழிவு

## தத்துவ விளக்கம்

தலைவரவர்களே, பிரின்ஸ்பால் இராமசாமி அவர்களே,

இன்று இந்தச்சேலம் காலேஜ் தத்துவக் கலைக் கழகத்தின் சார்பாக நான் பேசவேண்டுமென்று அக்கழகத்தாரால் அழைக்கப்பட்டிருக்கிறேன். இங்கு மாணவர்களும், ஆசிரியர்களும், மற்றும் பல் சிறப்பட்ட பொதுமக்களும் ஏராளமாய்க்கூடி இருக்கிறீர்கள் உங்கள் யாவருக்கும் புரியும்படியோ திருப்தி ஏற்படும்படியோ பேசுவது கஷ்டமான காரியமாகும். அதிலும் தத்துவக் கலைச் சார்பு கூட்டத்தில் தத்துவங்களைப்பற்றிப் பேசவேண்டியது முதல் உரிமை ஆதலால் இப்படிப்பட்ட கூட்டத்தில், தத்துவ விசாரணைப்பற்றிப் பேசுவது மிகமிகக் கஷ்டமான காரியம்.

தத்துவக்காட்சி, தத்துவ உணர்வு என்பன உண்மை. அதாவது உள்ளதை உள்ளபடி காண்பதும் அறிவதுமாகும். இயற்கை ஞானம் என்றும் சொல்லலாம்.

நாம் தத்துவத்தையும், இயற்கையையும் வேறுபடுத்திய காட்சியையும் குணத்தையும் உணர்வையும் கொண்டவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட நமக்கு வெறும், பச்சை உண்மை—தத்துவம் என்பன [illegible]மான காட்சியாகவும் [illegible]தான் இருக்கும். உதாரணம் வேண்டுமானால் ஒன்று சொல்லுகிறேன். ஒரு மனிதனைக் காண்பது என்பது இயற்கையை மறைத்து சாயலை வேறுபடுத்திய தோற்றத்தைக் காண்பது என்பதாகும். ஆனால் அதே மனிதனை இயற்கையாய் உள்ளபடி காண்பது, என்பது அவனை நிர்வாணமாக எவ்வித மறைவும், மாற்றமும் இல்லாமல் காண்பது என்பதாகும். இந்தக் காட்சி இன்றைய உலகுக்குப் பிடிக்காது. வெறுப்பையும், சங்கடத்தையும் உண்டுபண்ணக்கூடியதாகும். இப்படியே இன்றைய ஒவ்வொரு தன்மையையும் நிலைமையும் நிர்வாணமாய், உண்மையாய்க் காண்பது என்பது இன்றைய உலகுக்கு வெறுப்பாகவும். அருவருப்பாகவும் அதிருப்தியாகவுமிருக்கும். அதனால்தான் தத்துவ விசாரணைக்கும் தத்துவம் அறிவதற்கும் மனிதன் சில பக்குவத்தை அடைந்திருக்க வேண்டும் என்பார்கள்.

அதனால்தான்—நானும் உண்மைத் தத்துவத்தைச் சொல்லுவது என்பது பலருக்கு அதிருப்திகரமானதாக இருக்கும் என்று சொன்னேன். பொதுவாகவே நாட்டில் ஒரு பழமொழி உண்டு "யதார்த்தவாதி பஹுஜன விரோதி" என்று சொல்லுவதுண்டு. இதன் கருத்து மக்கள் யாவரும் பொய்யர்களாய் இருக்க வேண்டும் என்பதல்ல. ஏது உண்மையோ எது தத்துவமோ அது மக்களிடையில் மாற்றுருவம், மாற்றுப் பெயர், மாற்றுக்குணம்பெற்று இருக்கிறது. ஆதலால் உண்மை விளக்கம் திருப்தி அற்றதாகக் காணப்படும். எனவே தத்துவ விசாரணை விளக்கம் என்பதற்கு இயற்கையிலேயே மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதில் சங்கடமிருந்தாலும் நான், அதாவது ஒரு சாதாரண மனிதனும், தலைவர் என்னைப்பற்றி எடுத்துச் சொன்னதுபோல் நாஸ்திகன், மதத்துவேஷி, அரசியல் எதிரி என்கின்ற தன்மையில் பேர்வாங்கி இருக்கிறவனும், தத்துவத்தைப்பற்றிப் பேச தகுதியற்றவனுமான நான் தத்துவ விளக்கம்பற்றிப் பேசுவதென்றால் அது மிக மிக மிகச்சங்கடத்தைக்கொடுக்கக் கூடியதாகும்.

என்றாலும் என்மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்குக் குறைகளுக்குச் சமாதானம் சொல்லும் முறையிலேயே என் தகுதிக்கு ஏற்ற அளவு தத்துவத்தைப்பற்றி சொல்ல முயலுகிறேன். ஏனெனில் இந்த இப்படிப்பட்ட ஒரு அவையில் நான் எதைப்பற்றிப் பேசுவது என்பதாக எனக்குள் எழுந்த பிரச்சினை முடிவு பெறுவதற்கு முன்பதாகவே தலைவர் அவர்கள் என்னை அறிமுகப்படுத்துவதில் இந்த மேற்கண்ட சொற்களும் உச்சரிக்கப்பட்டதால் அவைகளே போதும் என்று கருதி அவைகளைப் பற்றிப் பேசலாம் என்றே [illegible]றேன்.

தோழர்களே! விஷயம் அற்பமானதாகவும் கருதப்படலாம். பிரமாதமானதாகவும் கருதப்படலாம். எப்படி எனில் சாதாரணமக்களுக்குக் கடவுள் மதம் அரசியல் விஷயங்களின் தத்துவம் மிகவும் அலட்சியமானதாகும். பெரிய அறிஞர்களுக்கு இந்த விஷயங்கள் அபாரமானதும் மிக நுணுக்கமாக அறிந்து பேசத்தக்கதுமாகும்.

ஒரு பாட்டுக்காரன் பாடும்போது பாமர மக்களும் வித்வத்தன்மை

உள்ளவர்களும் கலந்து இருந்து கேட்பார்களானாலும் பாமரமக்கள் பாட்டின் வாசகங்களை, சொற்களைப் பொறுத்தவரையில் கவனித்துவிட்டு "இது ஏதோ சாமிமீது பாடினான்", "இது ஏதோ பெண்களைப்பற்றிப் பாடினான்" என்று அந்த வார்த்தைகளின் அளவோடு அவர்கள் பாட்டுக்கச்சேரிக்குப்போன தன்மையை முடித்துக்கொள்ளுவர். அதே பாட்டுக்காரனிடம் பண்டிதத் தன்மை உடையவர்கள் கேட்ட அளவில் சங்கீதக்கலை ஞானத்தைக் கொண்டு மிக நுணுக்கமாகக் காதுகொடுப்பார்கள். ஆதலால் பாடுகிறவன் பாடுகிறவேலையை மிகப் பிரமாதமாகக்கொண்டு மிகக் கஷ்டத்தோடு கவலையோடு பாடவேண்டி இருக்கும். அதனால்தான் நான் பேச எடுத்துக்கொண்ட விஷயங்கள் அலட்சியமானதும் அபாரமானதும் என்று சொன்னேன்.

தோழர்களே, தலைவர் கடவுளைக் குறிக்கும்போது "எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த யாவையும் செய்கிற தன்மை உள்ளவர்" என்று சொன்னார். அதோடு கூடவே தலைவர் மதத்தைப்பற்றிக் குறிக்கும் போதும் "மனிதனுக்கும் கடவுளுக்கும் சம்மந்தத்தை உண்டாக்குவதற்கு மதம்" என்று சொன்னார். இது ஒரு மத பக்திக் கூட்டமல்ல; புராணப்பிரசங்கக் கூட்டமுமல்ல தத்துவவிளக்கம் என்னும் தலைப்பில் பேசுவதைக் கேட்க வந்திருக்கும்கூட்டம் ஆனதால் கடவுளுடையவும் மதத்தினுடையவும் தத்துவம் உண்மைத்தத்துவம் அதுவும் பச்சை உண்மையாய் பட்டாங்கமாய் நிர்வாணமாய் உள்ள தத்துவம் பேசப்படவேண்டியதாகும். ஆதலால் அந்தப்படி பேசுகிற முறையில் நான் பேசுகிறேன்.

உண்மையிலேயே என்னை நாஸ்திகன் என்றும், மதத்துவேஷி என்றும் பலர் சொல்லுகிறார்கள், பலர் கருதியுமிருக்கிறார்கள். இந்தப்படி நாஸ்திகர்கள் என்பவர்கள் யாராவது கருதி இருப்பார்களானால் நான் மகிழ்ச்சி அடைவேன். ஆஸ்திகர்கள் என்பவர்கள் கருதி இருப்பார்களானால் அவர்களுக்காகப் பரிதாபப்படுவதுடன் இந்த மாதிரி மக்களிடையில் இருக்கவேண்டி இருக்கிறதே என்று என்னையே நான் வருந்திக்கொள்ளுகிறேன். தத்துவ வாசகத்துக்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் கூட எனது தத்துவத்தை எடுத்துச்சொல்ல நான் பயப்பட்டால் அல்லது பித்தலாட்டம் செய்தால் நான் என்னையே வெறுத்துக்கொள்ள வேண்டியவனாவேன்.

ஆகவே என்னை நாஸ்திகன், மதத்துவேஷி என்று ஆஸ்திகன் சொல்லுவது மகா மகா அறியாமையும் அலட்சிய புத்தியும் ஆகும்.

இதை ஒரு உதாரணம் காட்டி விளக்குகிறேன்.

ஒரு ஊரில் ஒரு பிச்சைப் பிழைப்பு பார்ப்பனன் ஒருநல்ல காரியம் நடந்ததற்காகப் பிச்சைக்கொடுக்கும் ஒரு வீட்டிற்கு வந்து பிச்சைகேட்டான். அவ்வீட்டுக்காரர் மற்றவர்களுக்குக் கொடுத்ததுபோல் இவனுக்கும் 4-அணா கொடுத்தார். அதற்கு அந்தப் பிச்சைக்காரப் பார்ப்பனன் அந்த வீட்டுக்காரனைப்பார்த்து கோபித்துக்கொண்டு "ஏ ஓய்! தற்பெருமை, அன்னியர்களைக் குறைகூறுதல், பணத்தாசை ஆகிய மூன்றையும் துறந்து, நான்கு வேதம், ஆறு சாஸ்திரம் பதினெண் புராணம், தர்க்கம், மீமாம்சை, தத்துவஞானம் ஆகியவைகளைக் கற்ற மிக மேதாவியும், மகா பண்டிதனுமான எனக்கும் நாலு அணா? இந்த ஒன்றும் தெரியாத முட்டாள் கழுதைக்கும் நாலு அணாவா? வெகு யோக்கியமாய் இருக்கிறதே உம்முடைய தர்மம்" என்று கேட்டானாம்.

அதுபோல் இருக்கிறது ஒரு ஆஸ்திகன் என்பவன் ஒருவனைப்பார்த்து நாஸ்திகன் என்று சொல்லுவது என்கிறேன்.

ஏன் எனில் இந்த ஆஸ்திகன் கடவுளை எபபடி அறிந்திருக்கிறான் என்றால்,

"கடவுள் சர்வ வல்லமை உள்ளவர், சர்வ வியாபி (எங்கும் நிறைந்தவர்) சர்வத்தையும் (எல்லா காரியங்களையும்) நடத்துகிறவர். அவருக்கு மேம்பட்டவர் எவரும் இல்லை அவர் அன்றி (அவர் அனுமதியாமல்) ஒரு காரியமும் நடைபெறுவதில்லை" என்பதாக அறிந்திருப்பதாக சொல்லிவிட்டு, அப்படிப்பட்ட கடவுளை நான் இல்லை என்பதாகவோ மறுப்பதாகவோ சொல்லுகிறார் என்றால் இது அந்தப் பார்ப்பனன் சொன்னதற்கே சமானமானதாகும்.

அந்தப் பார்ப்பனன் முதலில் தன்னிடம் ஆத்மஸ்துதி, பரநிந்தை, திரவிய அபேட்சை இல்லை என்றும், தான் அவைகளை வெறுத்துவிட்டவன் என்றும் சொல்லிவிட்டு, உடனே நான் நாலுவேதம், ஆறு சாஸ்திரம் முதலியவைகளைப் படித்து கரைகண்ட மேதாவியாகிய மகா பண்டிதன் என்கிறான். இதில் அவன் தற்பெருமையை வெறுத்த யோக்கியதை தெரிகிறது.

அதுபோலவே பரநிந்தை—அன்னியனை இழிவாக்குவது—வைவது தன்னிடம் இல்லை என்று சொல்லிவிட்டு 'இந்த ஒன்றும் தெரியாத முட்டாள் மடையனுக்குமா நாலணா" என்கிறான்.

அடுத்தப்படியாகத் தனக்குப் பண ஆசையே இல்லை என்று சொல்லிவிட்டு 'இந்த நாலு அணாதானா எனக்குக் கொடுப்பது?" என்கிறான். எனவே தன்னைப்பற்றி அவன் சொன்னது அத்தனையும் பொய் என்பதும், கற்பனை என்பதும் அவன் பின்னால் சொல்லியதிலிருந்து வெளியாகிவிட்டன;

அதுபோலவே எல்லாம்வல்ல, எங்கும் நிறைந்த, யாவற்றையும் செய்விக்கிற கடவுளை ஒரு மனிதன் இல்லை என்று சொல்லுகிறான் என்று சொன்னால் ஒன்று அந்த ஆஸ்திகன் கடவுளுக்கு மேற்கண்ட குணங்கள் இருப்பதாகச் சொன்னது பொய்யாகவும் கற்பனையாகவும் இருக்கவேண்டும், அல்லது மற்ற மனிதனைப் பார்த்து நாஸ்திகன் கடவுள் இல்லை என்று சொன்னது தவறாக அறியாமையாக யோசனை அற்றதாக இருக்கவேண்டும்.

இருக்கிற கடவுளை இல்லை என்று சொல்லுவதில் சொல்பவனுக்கு என்ன லாபம். அல்லது சர்வத்தையும் செய்விக்கிற, சொல்லச் செய்கிற ஒரு கடவுள் இப்படியாக ஒருவனை சொல்லவும் நினைக்கவும் செய்வதில் கடவுளுக்குத்தானாகட்டும் என்ன லாபம் வரும். ஆகவே ஒரு மனிதன் இப்படி முட்டாள்தனமான காரியத்தைச் செய்வானா அல்லது ஒரு கடவுள் இப்படிப் பைத்தியக்காரத்தனமான காரியத்தைச்

(தொடர்ச்சி 7-பக்கம்)

# நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

(தோழர் M. சிங்காரவேலு B.A.,B.L.)

(9-11-46 குடி அரசின் தொடர்ச்சி)

### தனிவுடைமைப் பாதுகாப்பு

இனி வரும் நமது இந்திய அரசியல் திட்டத்தில் (Indian Constitution), அவனவன் சொத்து எதுவாயினும் அது பாதுகாக்கப் படுமெனத் திட்டம் செய்துள்ளார். இது அமெரிக்கர் திட்டத்திலிருந்து, நகல் செய்யப்பட்டது. இதுவரை இந்தத் திட்டம் இந்தியாவிலாகிலும், அல்லது பிரிட்டிஷ் அரசியல் திட்டத்திலாகிலும் இல்லை பொதுவுடைமை உலகில் பரவிவரும் விசையைக்கண்டு தனிவுடைமைக்காரர்கள், இத்திட்டத்தை அவரவர் ஊர்களில் அமைத்துக்கொள்கின்றார்கள் போலும்! ஆங்கிலத்தில் Each man for himself, the devil takes the hindermost" என்று ஒரு புராணப் பழமொழியுண்டு. அதாவது அவனவனே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளட்டும்; இளைத்தவன் எந்தக் கதி அடைந்தாலும் அடையட்டும் என்பது இதன் பொருள். இதன் கருத்தைச் சற்றுக் கவனிப்போம். மோசத்தாலானாலும் சரி, வஞ்சத்தினாலானாலும் சரி, பலரை வஞ்சித்ததிலானாலும் சரி, கொள்ளை அடித்ததிலானாலும் சரி, கொன்றதினாலானாலும் சரி, எந்த விதத்தில் பொருள் சேமிக்கப்பட்டாலும் சேமிக்கப்பட்ட சொத்து சேமித்தவனுடையதே. இந்தச் சொத்தை அரசாங்கமும் தொடப்படாதென்பது இதன் கருத்து. பேரில் ஜெபித்த ஊரைப்பங்கிட்டுக்கொண்டதிலமானாலும், நீரானாலும் இதையும் தொடப்படாது. எவன் பங்குக்கு வந்ததோ, அவனதல்லாமல், அவனுடைய ஏழேழு தலைமுறையும் அவனது சந்ததியாருடையதாம்! இவ்விதமாகத்தான், இப்போதுள்ள அரசர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும், மிராசுதார்களுக்கும் சுரோத்திரியம்தார்களுக்கும், தற்போதுள்ள சொத்தெல்லாம் பாவிக்கப்பட்டு வருகின்றனவென அறிக. இவ்விதச் சொத்துக்களின் வருமானத்திலிருந்து சேமிக்கப்படும் சொத்தும் இத்தகையதே. சொந்தக்காரன் அல்லாமல் அவனுடைய சந்ததி யாருக்கும் சொந்தமாம்!

ஒன்றுக்குப் பத்தாக வட்டி சம்பாதித்துச் சேர்த்த சொத்தும் தனிவுடைமையே. ஒரு வேலையும் செய்யாமல் வீட்டு வாடகையால் வரும் செல்வமும் தனிவுடமையே. ஆயிரக் கணக்கான தொழிலாளிகளுக்கு அரைகூலி கொடுத்து, தொழிற்சாலைகள், பஞ்சாலைகள், இரும்புத் தொழிற்சாலைகள் இரயில் ஒர்க்ஷாப்புகள் முதலியவைகளிலும், மற்றும் பல Factories, work shops, Shipping yards களிலும் வரும் இலாபமுழுமையும் தனிவுடைமையே. கம்பெனிகளென்றும், பாங்குகளென்றும் பலர்சேர்ந்து வர்த்தகம் செய்து சம்பாதிக்கும் இலாபமனைத்தும் தனி உடைமையே. பலர் மூலமாக ஒருவன் திரைகடலோடி சம்பாதித்த சொத்தும், தனிவுடைமையே. பலர் உழைப்பைக்கொண்டு சேமித்த செல்வமனைத்தும் தனிவுடைமையே. பொதுப்பணத்தால் B. A., M A, பரிட்சைசெய்து, லாயர்களாகவும், ஜட்ஜ்களாகவும், மந்திரிகளாகவும், கலைக்டர்களாகவும், கவர்னர்களாகவும் மற்றும் பல உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து சம்பாதித்த சொத்தும் தனிவுடைமையே: இவையாவும் தனிவுடைமையே! எந்த உழைப்புமின்றி, அகஸ்மாத்தாக வந்த சொத்தும் ஒருவனுடையதே. பந்தயம் மூலமாகவாவது, சூதாட்டத்திலாவது, திருவிளச் சீட்டென்று வழங்கும் லாட்டரியிலாவது வந்து குவியும் சொத்தும் ஒருவனுடையதே. இந்தச் சொத்துகளும் தனிஉடைமையே.

இவை எல்லா சொத்துகளையும்விட மாபாதகச் சொத்தொன்று உண்டு. அது இக்கால நாகரிகத்தில் உண்டானது: அது யாதெனில், உலகில்சண்டையைக்கிளப்பிவிட்டு, அதற்காகக் கடன்கொடுத்து, அந்தக் கடனுக்கு வரும்வட்டியால் நிரம்பும் சொத்தேயாகும். இதுவும் தனிச் சொத்தே.

இச்சொத்துகளின் முக்கிய இலட்சணம் என்னவெனில், ஏதோ ஒருவன் அரைவினாடி (A Single Second), உழைத்த உழைப்பால் சம்பாதித்த பொருளும் பேனாவைத் தொட்டு கை எழுத்துசெய்ததால்(பேனாவைத் தொடுவதும் ஒரு உழைப்பே!) சம்பாதித்த பொருளும், எந்த உழைப்புமின்றி வட்டிக்கு வட்டி வாங்கியதால் கிடைத்த பொருளும், ஒரு பைசா செலவிட்டு இலட்சக் கணக்கில் இலாபமாகச் சம்பாதிக்கும் பொருளும், ஒருமணி நேரம் பேசிக்கு ஆயிரம் ரூபாயாக வாங்கி, குவித்தபணக் குவியலும், சினிமாவுக்கு முகத்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

குடி அரசு

1946-ஆம் நவம்பர்மீ 23உ

# பிரகாசம் மந்திரிசபை நிலைக்குமா?

சென்னை மாகாணத்தில் பிரகாசம் மந்திரிசபை ஏற்பட்டு சுமார் ஆறு மாதங்கள் ஆகின்றன. இந்த ஆறுமாதகாலமாக நாட்டுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய நற்செயல் ஏதேனும் காங்கரஸ் மந்திரி சபையினர் செய்தனர் என்று கூறுவதற்கில்லை. ஆனால் மக்களுக்குத் தீமை விளைவிக்கக் கூடிய செயல்கள் செய்வதில் காங்கரஸ் மந்திரிசபையார் பின் வாங்கவில்லை. அதன் காரணமாக அவர்கள் பல எதிர்ப்புகளைத் தேடிக்கொண்டுள்ளனர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

உரிமைக்காகவும், தக்க ஊதியத்திற்காகவும் போராடும் தொழிலாளர்கள், முதல்மந்திரியார் பிரகாசம் பந்துலுகாருவால் பல்வகையாலும் கொடுமைப்படுத்தப் படுகின்றனர். அதன் காரணமாகக் காங்கரஸ் மந்திரிசபையினர் தொழிலாளர்களின் வெறுப்பையும், எதிர்ப்பையும் தேடிக்கொண்டனர்.

ஏனைய கட்சியினர்க்கு எல்லையில்லாதத் தொல்லைகள் அளித்துவரும் காங்கரஸ் காலிகளை மந்திரிசபையினர் தண்டிப்பதை விடுத்து, காலிகளால் கொடுமைக்கு ஆட்களாகிய மக்களுக்கு எச்சரிக்கைவிடுக்கின்றனர். அதனால் ஏனைய கட்சியினரின் பெருத்த எதிர்ப்பைக் காங்கரஸ் மந்திரிசபை சம்பாதித்துக்கொண்டுவருகின்றது.

மாகாணம் முழுதும் மதுவிலக்குச் செய்ய போதிய வசதியிருந்தும் ஒருசில ஜில்லாக்களில் மாத்திரம் மந்திரிசபையார் மதுவிலக்குச் செய்திருப்பதால் தோழர் காமராசர் போன்ற காங்கரஸ் தலைவர்களின் எதிர்ப்பையும் பிரகாசம் பந்துலுகாரு உண்டாக்கிக்கொண்டார்.

வகுப்புக் கலவரத்தை வலிந்து உண்டாக்கும் காங்கரஸ் காலிகளைக் கண்டிக்காத காரணத்தால் முஸ்லிம்களுடைய பெரும் வெறுப்பைத் தேடிக்கொண்டுள்ளனர் மந்திரி சபையினர்.

தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காகத் தக்கதொரு முயற்சி எடுக்காத காரணத்தால் தாழ்த்தப்பட்டோரின் எதிர்ப்பை வேறு பெற்றுள்ளனர்.

கள்ளமார்க்கட்டில் கொள்ளையடிக்கும் கதராடையணிந்த காங்கரஸ்காரர்களைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ளவில்லை மந்திரி சபையினர். இதை யுணரும் பொதுமக்கள் மந்திரிசபையை வாழ்த்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

ஆச்சாரியாரின் ஆட்சியில் விரட்டியடிக்கப்பட்ட இந்தியை மீண்டும் தமிழ்நாட்டில் புகுத்துவதற்குச் சூழ்ச்சி நிறைந்த முறையைக் கையாளுகின்றார் பிரகாசம். இதன் காரணமாகத் தமிழர்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பை மந்திரிசபையார் விலைகொடுத்து வாங்கிக் கொள்கின்றனர்.

காந்தியாரின் வெறுப்புக்காளாயிருந்த பிரகாசம், காந்தியாரைத் திருப்தி செய்வதற்குக் கொண்டுவந்த மில்லொழிப்புத் திட்டம் பொதுமக்களின் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. ஆடை உற்பத்திசெய்யும் ஆலைகளை ஒழித்துவிடுவதால் தமிழ் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் என்பதோடல்லாமல் வடநாட்டினர்க்குத் தமிழ்நாட்டினர் என்றென்றும் அடிமைகளாக இருக்கவேண்டுமென்பதை எல்லோரும் உணர்ந்துவிட்டனர். மத்திய சர்க்கார் மாகாணந்தோறும் மில்களைப் பெருக்கத் திட்டம் வகுத்திருக்கின்ற நேரத்தில் பிரகாசம் மில்களை ஒழிக்கத் திட்டம் வகுத்திருப்பது விந்தையாகவுள்ளது. சென்னை மாகாணத்தில் மத்திய சர்க்காரால் மில் வளர்ச்சிக்குச் செய்யப் போகும் ஏற்பாடு குறைந்த அளவிலிருக்கின்றது என்று முதல் வாரத்தில் குறைகூறிய பிரகாசம் அடுத்தவாரத்தில் மில்லை ஒழிப்பதற்குத் திட்டம் வகுத்துள்ளது மிகமிக விந்தையாகவுள்ளது.

இம்முறையில் பார்க்குங்கால் பிரகாசம் மந்திரிசபை பல துறையிலும் எதிர்ப்பைத்தேடிக் கொண்டுள்ளது. எதிர்ப்புகளின் சக்திகள் ஒன்று திரண்டு பிரகாசத்தின் மந்திரிசபைக்கு ஆபத்தை விளைவித்துவிடுமோ வென நினைக்கவேண்டியுள்ளது. எனவே இனியாகிலும் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறும் வகையில் பிரகாசம் மந்திரிசபை வேலை செய்யுமா?

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

திருச்சி:

7-11-46 இரவு 9½ மணிக்கு திருச்சி முனிசிபல் பள்ளி ஹால் கொட்டகையில் நடிகமணி எம். ஆர். ராதா அவர்களின் நாடகக் குழுவினரால் 'போர்வாள் நாடகம்' பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். நகர முனிசிபல் சேர்மன் அவர்களும், பல கவுன்சிலர்கள், அதிகாரிகள் முதலியவர்களும் நாடகத்திற்கு வந்திருந்தனர். வெளியூர்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்திருந்தனர். நாடக முடிவில் பெரியார் நாடகத்தின் தன்மையை

யும் அதில் உள்ள ஒவ்வொரு கருத்தையும், விளக்கிப் பேசினார்கள். போர்வாள் நாடகம் என்பது துவக்கத்தில் ஒரு கட்சி நாடகம் என்று கருதும்படியாக இருந்திருந்ததென்றாலும் இப்போது மிகவும் நாகரிகமான தன்மையில் யாருக்கும் எவ்விதமான வருத்தமும் ஏற்படுத்தாமல் எல்லா குறைபாடுகளையும் பொதுவாக எடுத்துக்காட்டி, குறைபாட்டுக்குக் காரணமாயிருப்பவர்களும் தங்களாகவே திருந்திக்கொள்ளும் மாதிரியில் திருத்தப்பட்டு நடந்து வருகிறதென்றும், இனியும் நாளாக நாளாக நாடகம் மிக்க உயர்நிலையை அடைந்துவிடுமென்றும் பாராட்டிப் பேசினார். நாடகமுடிவில் பெரியாருக்கு நன்கொடையாக 150 ரூபாய் கொடுக்கப்பட்டது.

o o

பொறையாறு:

9-11-46ல் பெரியார் ஈ. வெ. ரா., தோழர்கள் மதியழகன், க. திருமாறன், நாகூர் சையத் முகமத் சாயபு பாக்கவி ஆகியவர்கள் பொறையாறுக்கு வந்ததும் தோழர் பெருமாள் அவர்கள் கோட்டை பங்களாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு விருந்தளிக்கப்பட்டனர். மாலை 4மணிக்கு யானை, குதிரைகள், சுமார் 50 சைக்கில்படை, 500கருப்புச்சட்டைப் படைத் தொண்டர்கள் அணிவகுத்து முன்னால் செல்ல பாண்டுவாத்தியத்துடன் காரில் பெரியார் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலத்தில் சுமார் 3000 மக்கள் கலந்துகொண்டனர். ஊர்வலத்தின் போது பெரியார் அவர்களால் ராவ்பகதூர் டி. இரத்தினசாமி நாடார் அவர்களின் நினைவு நூல் நிலையத் திறப்புவிழாவும், பல கழகத் திறப்பு விழாக்களும், பல கொடியேற்று விழாக்களும் செய்யப்பட்டன.

மாலை 5-30 மணிக்குத் தோழர் ரா. சத்துருசங்காரவேலு அவர்கள் தலைமையில் கடைத்தெருவில் அலங்காரமாகப் போடப்பட்டிருந்த அர்ச்சுனன் நினைவுபந்தலில் ஒலிபெருக்கியோடு பொதுக்கூட்டம் நடந்தேறியது. பெரியாருக்குச் சுமார் 20 வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டதோடு சுமார் 100 மாலைகள் வரையில் பல கழகங்களின் சார்பில் பல வகுப்பினரால் சூட்டப்பட்டன. கூட்டத்தில் தோழர்கள் ஸைத் முகமது சாயபு, மதியழகன், க. திருமாறன், பெரியார் ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள். இதுவரையிலும் பொறையாறு கண்டிராதபடி சுமார் 10000 மக்கள் கூட்டத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. பெரியார் 3மணி நேரம் பேசியதோடு பல கேள்விகளுக்கும் விடையளித்தார்.

மன்னார்குடி:

10-11-46ல் மன்னார்குடி திராவிடர்கழக முதலாவது ஆண்டுவிழா நடைபெற்றது. பெரியார், தோழர்கள் கே. வி. அழகிரிசாமி, கடலூர் வீரமணி ஆகியவர்கள் மன்னார்குடிக்கு வந்ததும், புகைவண்டி நிலையத்திலிருந்து ஊர்வலமாகக் கல்கி தியேட்டருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கடைவீதி பந்தலடியிலும், புகைவண்டி நிலையத்திற்கு அருகிலும் பெரியார் அவர்கள் இயக்கக்கொடிகளை ஏற்றிவைத்தார். பல இடங்களில் பெரியாரைப் போட்டோ எடுத்தனர்.

பின்னர் ஆண்டுவிழா வழக்கறிஞர் தோழர் பி. வேணுகோபால் பி. ஏ., அவர்கள் தலைமையில் தொடங்கியது. தோழர் வீரமணி பேசிய பின்னர் பெரியார் சுமார் 2மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள். பிறகு தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள் பல கழகங்களின் சார்பில் பெரியாருக்கு வாழ்த்துரைகள் வழங்கப்பட்டன; மாலைகளும் சூட்டப்பட்டன; பணமுடிப்பும் அளிக்கப்பட்டது. நீடாமங்கலம் அர்ச்சுனன் இளைஞர் கழகச் சார்பில் 301 ரூபாய்கள் கொண்ட பணமுடிப்பும், ஒரு கருப்புத் துண்டும் கொடுக்கப்பட்டன.

மாலை4மணிக்குத் தோழர் வேணுகோபால் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கியது. தோழர் அழகிரிசாமி அவர்கள் சுமார் 1மணி நேரமும், பெரியார் அவர்கள் 3மணி நேரமும் சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பெரியார் தக்க பதிலளித்தார்கள்.

மில் ஒழிப்புக் கண்டனத் தீர்மானமும், அர்ச்சுனன் மறைவு குறித்து இரங்கல் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

## பிறப்பு

மறைந்த மன்னன் அர்ச்சுனன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் பர்வதம் அம்மையார் அவர்களுக்கு 23-11-46 காலை 4-30மணிக்கு பெண் மகவு பிறந்துள்ளது. தாயும் சேயும் நலமே.

என். இ. பாலகுரு.

o o

பெரியார் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்ட வேலூர் தோழர் சி. சம்பந்தம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் செல்வி சுந்தரம் அவர்களுக்குப் போளத்தில் 13-9-46ல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்குச் செங்குட்டுவன் என்ற பெயரிடப்பட்டது. அதன் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

## பெயரிடல்

தோழர் அ. சுப்பையா சீதாலட்சுமி அவர்களுக்கு 29-5-46ல் பிறந்த குழந்தைக்கு அன்பரசன் என்ற பெயரிடப்பட்டதின் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.


# தளபதி

திராவிடத் தளபதி உருவமமைந்த கலர் பேட்ஜுகள் ஓவல் அளவில் தயாரித்துள்ளோம். ஒன்றின் விலை 0-4-6 அணா. எம்மிடம் பெரியார், தளபதி, அம்பேத்கார், நெடுஞ்செழியன், புரட்சிக் கவிஞர் மற்றும் எல்லாத் திராவிடத் தலைவர்களின பேட்ஜுகளும படங்களும் கிடைக்கும்.

விபரங்கட்கு,

T. M. Mariadas & Co,
Leaders Lockets & Photos Sellers,
DHARAVI. BOMBOY, No. 17

குறிப்பு:-கொழும்பு தோழர்கட்கு பேட்ஜுகள் வேண்டின் முன்பணம் அனுப்பவும். வி. பி. பி. கிடையாது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

...தைக்காட்டி இலட்சக்கணக்கில் பவுன் சம்பாதித்ததால் குவிந்த செல்வமும், மற்றும் இவைகள்போன்ற பல முறைகளில் சம்பாதிக்கும் பொருளும், குவிந்ததற்கு மூலாதாரமாயுள்ள தொழிலாளிகளுக்காகிலும், அவர்களின் சந்ததியாருக்காகிலும் சேருவதில்லை. எவனொருவன் சொந்தக்காரனென்று வழங்கப்படுகின்றானோ, அவன் சந்ததியாரைத்தான் சேரும். பிறந்த தினத்தன்றே கோடீஸ்வரனுக்குப் பிறந்த குழந்தை அந்தக் கோடீஸ்வரன் செல்வத்திற்கு உடையவனாகின்றது. இனி தனி உடைமையின் முதல் இலட்சணம்.

இந்தத் தனிசொத்தை அதன் சொந்தக்காரன் எப்படி செலவிட்டாலும் இடலாம். கோடிக்கணக்கான பொன்னை அல்லது இலட்சக்கணக்கான தின்பண்டங்களை, அல்லது ஆயிரக்கணக்கான பால் [illegible]களைக் கடலில் கொட்டினாலும் கொட்டலாம்; கொளுத்தினாலும் கொளுத்தலாம்; அல்லது அழித்தாலும் அழிக்கலாம்! அல்லது குடியிலும், வெறியிலும், கூத்தி வேசித்தனத்திலும், வீண் ஆடம்பரங்களிலும், மோட்டார் வண்டிகளிலும், செலவிட்டாலும், இடலாம்!! அல்லது, மோட்சத்திற்காகச் சோம்பேறிகளுக்கும், கோயில் குளங்களுக்கும், சத்திரம், சாவடிகளுக்கும் செலவிட்டாலும் இடலாம்!!! ஆனால் இவ்வளவு சொத்துகளில், பொது மக்கள் கல்விக்காகிலும், சுகாதாரத்திற்காகிலும், வீடு வசதிகளுக்காகிலும், உணவு, ஆடை முதலிய விளை பொருளை அதிகப்படுத்துவதற்காகிலும் ஒரு இம்மி அளவேனும் செலவுசெய்ய கட்டாயப்படுத்த முடியாதாம். பைத்தியக்காரனொருவன் தனது செல்வத்தைக் கடலில் கொட்டினாலும் அதனை ஏன் என்று கேட்கப்படாதாம்! இது இந்தத் தனிஉடைமையின் இரண்டாம் இலட்சணம். இவ்விதமாக உலக முழுமையுமே, இந்தத் தனிஉடைமை காக்கப்பட்டுவருகிறது. இந்தப் பாதுகாப்புக்குத்தான் இருக்கும் எல்லா போலீசும், மேஜிஸ்டிரேட்களும், கோர்ட்டு, கச்சேரிகளும், லாயர், ஜட்ஜிகளுமென அறிக! இந்தச் சொத்துகளைப் பாதுகாப்பதற்குத்தான் இருக்கும் எல்லா ஜெயில்களும், ஜெயில் சூப்பிரிண்டெண்டுகளும் ஜெயில் வார்டர்களுமெனவும் அறிக!!

## தனிஉடைமையை உபயோகிக்க வேண்டிய விதம்

இத்யாதி தனிச்செல்வம் உலகில் எவ்வளவு இருப்பதாகக் கணக்கிட்டிருக்கின்றார்களென்றால் உலகிலுள்ள 160-கோடி ஆண் பெண் மக்கள் ஒவ்வொருவருக்கும், போதுமான உணவும், சீராக உடுத்திக்கொள்ள ஆடையும், சுகாதார வீடும், விஞ்ஞானக் கல்வியும், அதற்கு மேல் உயர்தர வாழ்வுக்கு வேண்டிய சகவாசம் அளிக்கக்கூடிய உலக செல்வமென பொருளாதார நிபுணர்கள் கணக்கெடுத்துத் தெரிவிக்கின்றார்கள். இதன்றியும், குழந்தைகளுக்கு வேண்டிய பாலும், உயர்தர வாழ்வுக்கு வேண்டிய மின்சார விளக்குகளும், வீடுகளில் மேஜை, சோபா, நாற்காலி முதலியவைகளும், பீங்கான் கோப்பை, வெண்கல பாத்திரங்கள் முதலியவைகளும், ஒவ்வொரு கிராமத்திலும் கேட்டு ஆனந்திக்க ஆகாய தொனிகளும், உலகிலுள்ள தனிச் சொத்திலிருந்து அமைக்கக்கூடும். ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும், புத்தக சாலைகளும், வாசகசாலைகளும், நந்தவனங்களும், மியூசியங்களும், கண்காட்சிசாலைகளும் அமைக்கவும்கூடும். உலக மக்கள், உலகமுழுமையும் இலவசத்தில் யாத்திரைசெய்ய கப்பல், இரயில், மோட்டார், ஆகாயரதம் முதலிய வசதிகளை உண்டாக்கக்கூடும். இன்றுசிலரிடம் வீணே குவிந்து கிடக்கும், வீணே செலவிடப்படும், வீணே துர்விநியோகப்படும் தனிச் சொத்துகளால், உலகிலுள்ள மக்கள் வாழ்வுக்கு வேண்டிய முக்கிய சுகபோகங்களை அனுபவிக்கலாமென்றால், இவ்வளவும் சிலரால் நாசமாக்கப்படும் காட்சி எவ்வளவு விசனிக்கத்தக்கது. இவ்வளவு நன்மை பயக்கக்கூடிய சொத்துகள் யாவும் நூற்றில் இரண்டுபேர் வசமே குவிந்து கிடக்கின்றன. ஆனால் இவ்வளவு செல்வத்திற்கும் மூல காரணகர்த்தாவாயிருக்கும் நூற்றுக்கு 98பேர் பசியால் வருந்தவும், பிணியால் சாகவும் நேரிடுகின்ற துர்ப்பாக்கியம் மிகவும் சகிக்கமுடியாதிருக்கின்றது.

[தொடரும்]

## மறைவு

திருச்சி திராவிட மருத்துவ கழகத் தலைவர் டாக்டர் க. பிச்சைமுத்து அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் மாரியாயி அம்மையார் தன் 27-வது வயதில் 8-10-46 மாலை 7மணிக்கு இயற்கை எய்தினார். அதையொட்டி ஈரோடு தோழர் ரா. ரங்கசாமி அவர்கள் தலைமையின்கீழ் அனுதாபக்கூட்டம் நடைபெற்றது. கா. ராமசாமி, க. பிச்சை, பொ. முத்து ஆகிய தோழர்கள் பேசினார்கள். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் நினைவாகக் குடி அரசு, விடுதலை, திராவிடநாடு ஆகிய பத்திரிகைகளுக்குத் தனித்தனியே மூன்று ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்விப்பாரா என்பதையாவது, ஒருவன் கடுகளவு நினைத்தாலும் சிந்திக்கும் சக்தி இருந்தாலும் மற்றவனை 'நாஸ்திகன், கடவுளை மறுக்கிறவன்' என்று குறையோ குற்றமோ சொல்ல மாட்டான்.

ஒருவனை ஒருவன் நாஸ்திகன், கடவுள் இல்லை என்று சொல்லுகிறவன் என்று சொல்லுவதே நாஸ்திகமாகும். கடவுளைச் சரியாக அறியாததேயாகும். அந்த வார்த்தையை உண்டாக்கினவர்களே நல்ல நாஸ்திகர்களாவர். கடவுள் இருந்தால் ஒரு மனிதன் இல்லை என்று சொல்ல முடியுமா? அல்லது ஒருவன் இல்லை என்று சொல்லுகிறான் என்று மற்றவன் நினைக்கவாவது முடியுமா? ஆகவே நாஸ்திகம் நாஸ்திகன் என்பன கடவுள் வியாபாரக்காரர்கள் தங்கள் வியாபாரத்துக்கு ஆதாரமாகக் கண்டுபிடித்த உபகருவிகளேயாகும். கடவுள் வியாபாரக்காரனுக்கு அல்லாமல் மற்றவனுக்கு இந்தக் கவலையே இருக்க நியாயமில்லை.

கடவுள் பற்றிய தத்துவ விளக்கம் என்றால் கடவுள் நிர்வாணமாய், பட்டாங்கமாய் காணப்படும் வரையில் ஆராய்ச்சி செய்வது என்பதாகும். ஒரு விஷயத்தைத் தத்துவ விசாரணை செய்ய முதலில் என்ன, ஏன், எதற்காக, எப்படி, எங்கே, எப்போது என்பன போன்ற கேள்விகளைப் போட்டு திருப்தியான பதில்பெற வேண்டும். தயவு தாட்சண்யமற்ற கேள்வி போடவேண்டும் தத்துவவிசாரணை என்பதும், தர்க்கவாதம் என்பதும் ஒன்றுக்கொன்று சம்மந்தமுடையதாகும். ஆகையால் சர்வசக்தி, சர்வ வியாபகம், சர்வத்தையும் நடத்துதல் ஆகிய அபார குணங்களைக் கொண்ட ஒரு பரம்பொருளைப்பற்றித் தத்துவ விசாரணை செய்கிறவர்கள் இந்த 6, 7 கேள்வி மாத்திரமல்லாமல் இன்னும் 60, 70 சோதனைகள் செய்து பார்க்கவேண்டும். பக்தனுக்கு இது தேவை இருக்காது. தத்துவ விசாரணைக்காரனுக்கு இது அவசியமாகும். கடவுள் மூட பக்தியால், குருட்டு நம்பிக்கையால், விளங்குபவராக இருக்கக்கூடாது. வேறு யாருக்காகிலும் அப்படி விளங்கினாலும் பகுத்தறிவுள்ள மனிதனுக்கு அதிலும் தத்துவ விசாரணைக்காரனுக்கு அப்படி குருட்டு நம்பிக்கையில் விளங்கக்கூடாது என்பேன்.

எதற்காகக் கடவுள், ஏன் கடவுள் எது கடவுள் என்கின்ற விளக்கம் அவசியம் ஒவ்வொரு தத்துவ விசாரணைக்காரனுக்கும் விளங்கியாக வேண்டும். மனிதனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. அது ஆராய்ச்சிக்காக ஏற்பட்டதே தவிர கண்மூடித்தனமான மிருகத்தன்மைக்கு ஏற்பட்டதல்ல. பகுத்தறிவை மனிதன் தப்பாய்ப் பயன்படுத்தி அதிகமான தொல்லையில் மாட்டிக்கொண்டிருக்கிறான். இந்தத் தொல்லைக்குப் பரிகாரமாகக் கடவுளைச் சிருஷ்டித்துக் கொண்டான். அரசன் ஏன்? குடிகள் ஏன்? ஏழை, பணக்காரன் ஏன்? மேல் ஜாதி, கீழ் ஜாதி ஏன்? உழைப்பாளி அடிமையும், சோம்பேறி எஜமானும் ஏன்? பிச்சைக்காரன், பிரபு ஏன்?

இந்தத் தன்மைகளை ஏற்படுத்தவும் நிலைநிறுத்தவும், பாதுகாக்கவும் அல்லாமல் கடவுளால் கண்ட பயன் என்ன? அவர் செய்த நல்ல காரியம் என்ன?

இந்த வேலைகளுக்கு ஒரு கடவுள் வேண்டுமா?

பகுத்தறிவு கொண்ட மனிதன் சாந்தி, அன்பு, திருப்தி, இல்லாமல் கவலையில், அதிருப்தியில் குறையோடு சாவதற்குக் காரணம், கடவுள் அல்லாமல் வேறு என்னவாய் இருக்கக்கூடும்?

அவனவன் முட்டாள்தனம் காரணம் என்றால் பகுத்தறிவு இருப்பது எதற்காக? முட்டாள்தனத்தை உண்டாக்கவா? பகுத்தறிவு இல்லாத ஜீவன்களுக்கு இல்லாத கெட்ட குணங்கள், கவலைகள், குறைபாடுகள், இன வெறுப்புகள், துரோகங்கள் பகுத்தறிவு உள்ள ஜீவனான மனிதனுக்கு ஏற்படுவானேன்? பகுத்தறிவற்ற துஷ்ட ஜந்துக்களிடம் இல்லாத கெட்ட குணங்கள் பகுத்தறிவுடைய மனிதனிடத்தில் இருப்பானேன். கடவுளைக் கண்டதாலா? கடவுளைக் கற்பித்துக்கொண்டதாலா? கடவுள் தன்மையை, கடவுள் சக்தியைத் தவறாகக்கொண்டதாலா? எதனால் என்பது பகுத்தறிவுக்குக் கூட எப்படி பரிகாரம் செய்து கொள்வது என்பது முடியவில்லையானால் பகுத்தறிவின் பயன்தான் என்ன? கடவுளின் தன்மைதான் என்ன?

கடவுள் எதற்காக? அது மனிதனுக்குத் தானாகத் தோன்றியதா அல்லது வேறு மக்களால் தோற்றுவிக்கப்பட்டதா? தானாகத் தோன்றியிருக்குமானால் ஏன் எல்லோருக்கும் தோன்றவில்லை? தோன்றியவர்களுக்கும் ஏன் பலவிதமாய்த் தோன்றவேண்டும்? அதன் தன்மைகளும் சக்திகளும்கூட பலவிதமாய்த் தோன்றப்படுவானேன்?

தோற்றுவிக்கப்பட்டதானால் எதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது? எந்தக் காரணத்துக்காகத் தோற்றுவிக்கப்பட்டதோ அந்தக்காரணம் நிறைவேறிற்றா? தோற்றுவித்தவர்கள் வெற்றிகண்டார்களா? கடவுள் காணப்பட்டும் அல்லது கடவுள் கற்பிக்கப்பட்டும் மனிதன் ஏன் கடவுள் தன்மைக்கு, கடவுள் விரும்புகிற தன்மைக்கு மாறாக நடக்கிறான்?

கடவுளால் சர்வமும் நடைபெறுகின்றன. கடவுள் சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ளவர் என்பதாக இருந்தும் கடவுளால் என்ன காரியம் நடக்கிறது? எதையும் கடவுள் பெயரைச் சொல்லி மனிதன்தான் செய்கிறான்; கடவுளை அலட்சியப்படுத்திவிட்டு கடவுளுக்கு இஷ்டமில்லாத காரியம் என்பதைக்கூட மனிதன் செய்கிறான். மனிதனுக்கு வேண்டாததும், மனிதனுக்குக் கேடான காரியமும் நடந்தவண்ணமாய் இருக்கின்றன; ஒரு காரியமாவது கடவுள் உணர்ச்சி உள்ள உலகில் பூரணத்துவம் ஆனாவது திருப்தி உள்ளதும் குறை இல்லாததுமான காரியும் காணக்கூடியதாகவே இல்லை. மனித எத்தனப் பாதுகாப்பு இல்லாவிட்டால் வாழ்க்கையில் ஒரு காரியமும் பத்திரப்படாது என்பதோடு கடவுளுக்குக்கூட பத்திரமில்லை என்றே சொல்லலாம்.

[தொடரும்]

குறிப்பு:-இந்தச் சொற்பொழிவின் கருத்து கடவுள் தத்துவத்தின் விளக்கமே ஒழிய கடவுள் உண்டா இல்லையா என்ற பிரச்சினை முடிவல்ல. மற்றும் மதம் சம்மந்தமாகவும் பேசியது பின்னால் பிரசுரிக்கப்படும்.

## மதிப்புரை

### "நாமக்கல் கவிஞர் நாவன்மை"

திருவத்திபுரம் தோழர் வித்துவான் மாவண்ணா தேவராசன் அவர்களால் ஆக்கப்பட்ட "நாமக்கல் கவிஞர் நாவன்மை" என்ற நூலைப் பார்வையிட்டோம். நாமக்கல் கவிஞர் தான் இன்ன இனத்தைச் சேர்ந்தவர் என்பதையே மறந்து, திராவிட இனத்தையும், திராவிடர் இயக்கத்தையும் தன்மான இயக்கத்தையும் குறைகூறுகின்றதைத் தோழர் மாவண்ணா தேவராசன் தக்கக் காரணங்காட்டிக் கண்டித்துள்ளார். நாமக்கல் கவிஞரின் அறியாமையைப் புலப்படுத்தும் வகையில் தோழர் தேவராசன் திராவிடர் கழகம், சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றின் கொள்கைகளை நன்கு விளக்குகின்றார். யாவரும் படித்துப் பயன்பெறற்குரியதே "நாமக்கல் கவிஞர் நாவன்மை" என்ற நூல் எனினும், நாமக்கல்லாரைப் பொருட்படுத்தி அவருக்கென ஓர் மறுப்புரை எழுதுதல் வேண்டுமோ வென்பது நமக்கு வியப்புதான். என்றாலும் மறுப்புரை எழுதும் முகத்தான் திராவிடர்களின் தொன்மையையும், இயல்புகளையும், பல சான்று காட்டி விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் விலை ரூபாய் ஒன்று.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ இலட்சுமி நூல் பதிப்பகம், திருவத்திபுரம்.

(வ. ஆ)

o o

### "மறுமலர்ச்சிக் கவிதைகள்"

புதுவைத் தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்களால் ஆக்கப்பட்ட "மறுமலர்ச்சிக் கவிதைகள்" என்ற நூலைப் பார்வையிட்டோம்.

'மறுமலர்ச்சிக் கவிதைகள்' என்ற நூல் எல்லாத் துறையிலும் மறுமலர்ச்சியை விரும்பும் இந்நாளில் ஒவ்வொருவருக்கும் தேவை. மொழித்தொண்டு, நாட்டுத் தொண்டு, சமூகத் தொண்டு ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு "மறுமலர்ச்சிக் கவிதைகள்" எழுதப்பெற்றுள்ளன. பண்டைத் தமிழரின் சிறப்பினைச் சித்தரித்துக் காட்டுகின்றார் தோழர் சிவப்பிரகாசம். எளிய இனிய நடையில் எழுதப்பெற்ற மறுமலர்ச்சிக் கவிதைகள் பாடுவோர்க்கும் கேட்போர்க்கும் இன்பம் அளித்து உவகையூட்டும் ஆற்றலுடையவையாகவுமுள்ளன. பெண்ணினத்தைப் பேதையர்களாக்கி வைத்திருக்கும் நிலைமையைக் களைந்தெறிய உறுதுணையாயிலங்கும் 'மறுமலர்ச்சிக் கவிதைகள்' என்பதில் எத்துணையும் ஐயமில்லை. வீழ்ச்சியுற்ற இனத்தை வீறுகொண்டெழச் செய்யும் உணர்ச்சிமிக்க கருத்துக்களே கவிதைகளாகக் காட்சியளிக்கின்றன. எல்லோரும் படித்துப் பயன்பெறுதற்குரிய 'மறுமலர்ச்சிக் கவிதைகள்' என்னும் நூலின் விலை 13 அணாதான்.

கிடைக்குமிடம்:— ஞாயிறு நூற் பதிப்பகம், 28, அம்பலத்தாடி ஐயர் மடத்துவீதி, புதுச்சேரி (F. T.)

o o

### தமிழ்ச் சோலை

மகா மதுரகவி வீ. வே. முருகேச பாகவதர் அவர்கள் இயற்றிய 'தமிழ்ச் சோலை' என்னும் நூல் படித்தின்புற்றோம். 'தமிழ்ச் சோலை' என்ற நூல் மக்களைத் தன்வயப் படுத்தும் கவி ஆற்றல் நிறைந்ததென்னின் மிகையாகாது. தண்டமிழ் மொழியின் தனிச் சிறப்பு தமிழ்ச்சோலையில் மிளிர்கின்றது என்றே சொல்லலாம். சீர்திருத்தக் கருத்துகள் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன தமிழ்ச் சோலையில். நகைச்சுவையளிக்கும் நல்ல கவிதைகள் தமிழ்ச் சோலையில் ஆங்காங்கு இலங்குகின்றன. உணர்ச்சியூட்டும் உயர்ந்த கவிதைகள் நயம்படப் பாடப்பெற்றுள்ளன.

தாய் மொழி, தாய் நாடு முதலியவற்றிற்குப் பணியாற்றுவோர்க்கு இளைப்பாறு சோலையாய்த் தமிழ்ச்சோலை உதவும் எனலாம். இதன் விலை ஒரு ரூபாய்.

கிடைக்குமிடம்:— "மங்கள நிலையம்" I. T. பிளாக், அலெக்சாண்டர் கிராமம், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

o o

### "முஸ்லிம் தேசியக் கீதம்"

"முஸ்லிம் தேசிய கீதம்" என்ற நூல், சீறா புராணத்தை ஆக்கிய உமறு புலவரின் ஆறாவது பௌத்திரரும், முஸ்லிம் தேசிய கவிஞருமாகிய பேட்டை முத்தமிழ் மதியமிர்தப் புலவர் அவர்களால் ஆக்கப்பட்டது. எளிய தமிழ் நடையில் இசைப்புலவர்கள் பாடி இன்புறுதற்குரிய பாடல்கள் 'முஸ்லிம் தேசிய கீதம்' என்ற நூலில் மிளிர்கின்றன. பாகிஸ்தான் திட்டத்தை வற்புறுத்துதற்குரிய கொள்கைகள் பாக்களுள் செறிந்துள்ளன. யாவரும் படித்தின்புறுதற்குரியது. இதன் விலை 6 அணாதான்.

கிடைக்குமிடம்: மானேஜர், முன்னேற்றம், திருநெல்வேலிப்பேட்டை.

இலவச சிகிச்சை இலவச சிகிச்சை

அடியிற்கண்ட வியாதிகளுக்கு நேரில் பூரா
இலவச சிகிச்சை

வி. பி. மூலம் விரும்புவோருக்கு:-

இளம்பின்ன வாதம் பாரிசவாயு, குஷ்டம், யானைக் காலுக்கு (தாம்பரக்குளிகை) எல்-லேப்ரோ ரூ. 5-0-0
வெட்டை, ஆஸ்த்மா, இருமல் மற்றும் உஷ்ண ரோகங்களுக்கு கினாப்போ ரூ 3-0-0
போக சக்திக்கு (இரு பாலருக்கும்) மாதவிடாய் கோளாறு, ரத்தக்குறைவு முதலியவைகளுக்கு பிளாட்டோ ரூ 3-0-0

சகல பல் வியாதிகளையும் போக்கி, பல் ஆட்டத்தையும் உறுதிப்படுத்தும் ஸ்ரீ கிருஷ்ணா டெண்டல் பாம் முதல் தரம் அணா 8. இரண்டாந்தரம் அணா 4.
(30-வருஷ அனுபவம்)

Dr. M. R ராஜகோபாலன் L. I. M. B cl.,
தேசி தர்ம வைத்தியசாலை, மன்னார்குடி (P. O) S. I. R.

Edited, Printed, and Published by N Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.